[26th February 1966

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : The Government have already sanctioned the outline proposal to bring water-supply to Madurai town from Vaigai river with Peranai regulator as source.

சேலம் நகரில் சுகாதார வசதி

* 122 கேள்வி.—திரு. எஸ். ஆறுமுகம் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலத்திலுள்ள செவ்வாய்ப்பேட்டை பகுதி வழியாகச் செல்லும் திருமணிமுத்தாற்றில் சேலம் சாக்கடை நீர் கலந்து அதனால் சுகாதாரக் கெடுதி ஏற்பட்டிருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் காரணமாக சுகாதார வசதியளிக்கும் திட்டம் ஏதேனும் உண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) திருமணி முத்தாற்றில் சேலம் சாக்கடை நீர் கலந்தாலும் அதனால் சேலம் மக்களின் பொதுச் சுகாதாரம் பாதிக்காமலிருக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, அந்த ஆற்றில் சாக்கடை கலந்த பிறகு என்ன நடவடிக்கை எடுத்து சுத்தம் செய்திருக்கிறார்கள் என்று தெளிவாக அறியலாமா? எந்தத் துறையில் எப்படி எப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அறியலாமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சில ஏரியாக்களில் திறந்த சாக்கடைகள் இருக்கின்றன. மழை காலத்தில் அவை ஓவர்ஃப்ளோ ஆக வழி இருக்கிறது. அந்த மாதிரி ஆகி, சல்லேஜ் வாட்டர் ஆற்றில் போகாமல் இருக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கலாமோ அவைகளை எடுத்திருக்கிறோம்.

Palayamkottah-Tirunelveli Co-operative Stores

* 123 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the reasons for extending the period of the Special Officer for over four years, to manage the affairs of Palayamkottah-Tirunelveli Co-operative Stores, Limited (O. 886), Tirunelveli ; and

(*b*) whether there is any proposal to hold elections to the committee of the Society in the near future?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) பண்டகசாலையின் முன்னாள் பணியாளர் சிலர் மீது பண மோசடிக்காகவும், பண்டகசாலை இருப்புகளைக் கையாடியதற்காகவும் தொடரப்பட்ட கிரிமினல் வழக்குகளும், கையாடிய தொகைகளைத் திரும்ப வசூலிக்க பண்டகசாலையின் முன்னாள் நிர்வாகிகள், பணியாளர்

ஆகியோர்மீது நடுவனரிடம் தொடரப்பட்ட வழக்குகளும் இன்னும் முடிவுறவில்லை. வழக்குகள் இன்னும் முடிவுறாததால், சங்கத்தின் அலுவல்களை நிர்வகிப்பதற்காக விசேஷ அதிகாரியின் பதவிக் காலத்தை நீட்டித்தல் விரும்பத்தக்கதெனவும் அவசியமான தெனவும் கருதப்படுகின்றது.

(இ) தற்போதைய விசேஷ அதிகாரியின் பதவிக் காலம் 1966-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் முடிவடையும். அப்போது இதுபற்றி ஆலோசிக்கப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், இப்போது வழக்கில் இருக்கக் கூடிய நிர்வாகிகள் இனி நிர்வாகத்திற்கு வர சந்தர்ப்பம் இல்லை. அவர்கள் காலம் முடிவடைகிறபோதாவது தேர்தல் நடத்த ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : அது தான் முக்கிய கேள்விக்குப் பதில் அளிக்கும் போது சொன்னேன். விசேஷ அதிகாரியின் பதவிக் காலம் மார்ச், 1966-ல் முடிவு ஆகிறது. அதற்குப் பிறகு முடிவு செய்யலாம்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : சமீப காலமாகக் கூட்டுறவுத் துறையில் பண மோசடிகள் அதிகமாக ஆகி வருகிறது என்பதை அரசாங்கம் உணர்ந்திருந்தும், அப்படிப்பட்ட வழக்குகளை உடனடியாக முடிக்காமல் அவர்களுடைய காலம் வரையில் நீடித்துக்கொண்டிருக்கக் காரணம் என்ன ? இனிமேலாவது மற்றத் துறைகளில் கவனம் செலுத்துவதை விட்டு தவறு செய்தவர்களைத் தண்டிக்க தனிச் சட்டம் கொண்டுவர ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : கனம் அங்கத்தினர் பொதுவாகப் பேசுகிறார்கள். ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றிக் கேட்டால் என்றால் பதில் சொல்ல முடியும், அல்லது தெரிந்து சொல்ல முடியும்.

பரம்பூர் கூட்டுறவு நாணயச் சங்கம்

*124 கேள்வி.—**திரு. பி. முருகையன் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

புதுக்கோட்டை பகுதி, பரம்பூர் கூட்டுறவு நாணயச் சங்கத்தில் 1965 டிசம்பரில் கையாடல் செய்யப்பட்டதாக சங்கத்தின் நிர்வாகக் கமிட்டி கலைக்கப்பட்டது உண்மையா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இல்லை.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, பரம்பூர் சொஸைட்டியில் 1965 டிசம்பரில் ரூ. 40,210 கையாடப்பட்டதாகவும் சொஸைட்டியின் நிர்வாக சபையைக் கலைத்ததாகவும் செய்தி எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. இதன்மேல் அமைச்சர் அவர்கள் என்ன முடிவு எடுத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.